தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2043—ஐப்பசி 13

2012 அக்டோபர் 29, திங்கட்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10—00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"இயல்புளிக் கோல்ஓச்சும் மன்னவன் நாட்ட
பெயலும் விளையுளும் தொக்கு"

நீதிநெறி முறைப்படி, நல்லாட்சி நடத்தும் அரசருடைய நாட்டில், பருவ மழையும், குறையாத விளைச்சலும், ஒருசேர நிறைந்திருக்கும்.

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி* (*) *இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

1. இரங்கற்குறிப்புகள்

முன்னாள் உறுப்பினர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர்களான திரு. எம். சேட்டு அவர்கள் 16—5—2012 அன்றும், திரு. பா. அப்துல் சமத் அவர்கள் 21—6—2012 அன்றும், திரு. ஓ.பி. இராமன் அவர்கள் 5—7—2012 அன்றும், திரு. மு. அலங்காரம் அவர்கள் 31—7—2012 அன்றும், திரு. வி.கே. லட்சுமணன் அவர்கள் 25—8—2012 அன்றும், திரு. எஸ். காதர் பாட்சா என்கிற வெள்ளைச்சாமி அவர்கள் 31—8—2012 அன்றும், திரு. எஸ்.எஸ். பொன்முடி அவர்கள் 2—10—2012 அன்றும் மற்றும் திரு. அ.லெ. சுப்பிரமணியன் அவர்கள் 27—10—2012 அன்றும் மறைவுற்ற செய்தியினை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

[பேரவைத் தலைவர்] [2012 அக்டோபர் 29

திரு. எம். சேட்டு அவர்கள் 1989 முதல் 1991 வரை செங்கம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்புறப் பணியாற்றினார்.

திரு. பா. அப்துல் சமத் அவர்கள் 1989 முதல் 1991 வரை வாணியம்பாடி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு திறம்படப் பணியாற்றினார்.

திரு. ஓ.பி. இராமன் அவர்கள் 1967 முதல் 1971 வரையிலும் மற்றும் 1971 முதல் 1976 வரையிலும் இரண்டு முறை மேலூர் (தெற்கு) தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றினார். மேலும், 1969 முதல் 1971 வரையிலும் மற்றும் 1971 முதல் 1976 வரையிலும் அமைச்சராகப் பணியாற்றியுள்ளார்.

திரு. மு. அலங்காரம் அவர்கள் 1967 முதல் 1971 வரை கடலாடி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு பாராட்டத்தக்க வகையில் பணியாற்றினார்.

திரு. வி.கே. லட்சுமணன் அவர்கள் 1991 முதல் 1996 வரையிலும், 1996 முதல் 2001 வரையிலும் மற்றும் 2001 முதல் 2006 வரையிலும் மூன்று முறை கோயம்புத்தூர் (கிழக்கு) தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பாகப் பணியாற்றினார்.

திரு. எஸ். காதர் பாட்சா என்கிற வெள்ளைச்சாமி அவர்கள் 1971 முதல் 1976 வரையிலும் மற்றும் 1989 முதல் 1991 வரையிலும் இரண்டு முறை முதுகுளத்தூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சீரிய முறையில் பணியாற்றினார்.

திரு. எஸ்.எஸ். பொன்முடி அவர்கள் 1996 முதல் 2001 வரை பல்லடம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பாகப் பணியாற்றினார்.

திரு. அ.லெ. சுப்பிரமணியன் அவர்கள் 1967 முதல் 1971 வரையிலும், 1989 முதல் 1991 வரையிலும் மற்றும் 1996 முதல் 2001 வரையிலும் மூன்று முறை திருநெல்வேலி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறந்த முறையில் பணியாற்றினார்.

2012 அக்டோபர் 29] [பேரவைத் தலைவர்]

இம்முன்னாள் உறுப்பினர்களது மறைவால் அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும்வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. விதி 110–ன்கீழ் அறிக்கை

தமிழ்நாடு சிறப்புக் காவல் இளைஞர் படை உருவாக்குதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டம்–ஒழுங்கைப் பராமரிப்பது, குற்ற நிகழ்வுகளைக் கண்டுபிடிப்பது, குற்றங்கள் நிகழாமல் தடுப்பது, போக்குவரத்தை சீர்படுத்துவது, இயற்கை இடர்பாடுகளின்போது மீட்புப் பணிகளை மேற்கொள்வது, விழாக் காலங்களில் ஏற்படும் கூட்ட நெரிசல்களை முறைப்படுத்துவது என பல்வேறு இன்றியமையாப் பணிகளை தமிழகக் காவல் துறை ஆற்றி வருகிறது.

முற்பகல் 10–05

இப்படிப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த காவல் துறையில் உள்ள மொத்தப் பணியிடங்களின் எண்ணிக்கை ஒரு இலட்சத்து 13 ஆயிரத்து 629 ஆகும். இது, 635 மக்களுக்கு ஒரு காவல் அலுவலர் என்ற விகிதாச்சாரத்தில் அமைந்துள்ளது. 1–1–2012 நிலவரப்படி, இந்த அனுமதிக்கப்பட்ட பணியிடங்களுக்கு எதிராக 82 விழுக்காடு காவல் அலுவலர்கள் மட்டுமே பணியில் இருந்து வருகிறார்கள்.